NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2013

# TAMIL FIRST ADDITIONAL LANGUAGE: PAPER II

Time: 2 hours 70 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 9 pages. Please check that your question paper is complete.
2. There are 4 sections in this question paper. Each section has two questions. Every question has 35 marks. Only TWO questions must be answered from the entire paper. You may not answer both questions from one section.
3. Read the instructions to each question carefully.
4. Answer all questions, taking note of choices given.
5. Number your answers in accordance with the question number.
6. All answers must be in **TAMIL**.

---

IEB Copyright © 2013

SECTION 1 பகுதி ஒன்று

**கீழ்வரும் கதையை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.**

# கள்ளர்கள் கொள்ளை

மட்டியூர் என்னும் ஊரிலே மாணிக்கசாமி என்னும் பெயருடைய செல்வன் ஒருவன் நாற்பது ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்திருந்தான். அவன் பல வழிகளாலும் பொருளைத் தேடினான். அவனிடம் ஏராளமான பொருள் குவிந்தது. மாணிக்கசாமி அந்தப் பொருள்களை நன்கு பயன்படுத்தவில்லை. எளியவர்களுக்கு ஒன்றும் கொடான். விருந்தினர்களுக்குக் கூட உணவிடான். விருந்தினர்களைக் கண்டால் ஏதேனும் சாக்குப்போக்குச் சொல் அனுப்பி விடுவான்.

புலவர்கள் இவன் பெருஞ்செல்வனாக இருக்கிறானே! ஏதேனும் உதவி செய்வான் என்று சென்றால், 'சோம்பேறிகளாகத் திரியும் உங்களுக்கு ஏன் பொருள் கொடுக்க வேண்டும்' என்று வாய்க்கு வந்தபடி இகழ்ந்துரைப்பான். தானும் தக்கவாறு பொருளைச் செலவிட்டு உண்ண மாட்டான். உண்ண விரும்பும் மனைவி மக்களையும் உண்ண விடமாட்டான். பொருள்கள எல்லாம் பெட்டிகளில் பூட்டி வைத்தான். அப்பெட்டிகள் மீது தானே இராப்பகல் காவலாக இருந்து கொண்டிருந்தான்.

சாவு என்று ஒன்று இருக்கின்றது என்பதையும் அது தனக்கும் உண்டாகும் என்பதையும் மாணிக்கசாமி அடியோடு மறந்து விட்டான். அப்பொருள்களைக் கள்ளர்கள் வந்து கவர்ந்துகொண்டால் என்ன செய்வது என்னும் அச்சம் மாத்திரம் அவன் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தது. அதனால் அவன் இராப்பகல் உறக்கம் கெட்டு வருந்திக் கொண்டிருந்தார்.

மாணிக்கசாமியிடம் பொருள் இருப்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு நாள் இரவு தீவட்டிக் கொளைக்காரர்கள் பலர் மாணிக்கசாமியின் வீட்டைச் சூழ்ந்து கொண்டனர்.

IEB Copyright © 2013

**1.1 கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை நிரப்புக:**

1.1.1 அவன் பல _ _ _ _ _ _ _ பொருளைத் தேடினான். (2)
1.1.2 அவனிடம் _ _ _ _ _ _ _ பொருள் குவிந்தது. (2)
1.1.3 _ _ _ _ _ _ _ இவன் பெருஞ்செல்வனாக இருக்கிறானே! (2)

**1.2 சரியான விடை எழுதுக.**

1.2.1 மாணிக்கசாமி எங்கே வாழ்ந்திருந்தான்? (2)
1.2.2 விருந்தினர்களுக்கு என்ன செய்தான்? (2)
1.2.3 யார் வாய்க்கு வந்தபடி இகழ்ந்தார்கள்? (2)
1.2.4 எதை மாணிக்கசாமி அடியோடு மறந்தான்? (2)

**1.3 உண்மை, அல்லது உண்மை அல்ல என்று எழுது.**

1.3.1 மாணிக்கசாமியின் வயது நாற்பது. (2)
1.3.2 ஒரே வழியில் பொருள்களைக் குவித்தான். (2)

**1.4 எதிர்ச்சொல் தருக.**

1.4.1 பெரிய (2)
1.4.2 உண்டு (2)
1.4.3 கிடைத்தது (2)

**1.5 ஒருமைக்குப் பன்மை எழுதுக.**

புலவர் (1)

**1.6 இக்கதையை 10 - 12 வரிகளுக்குள் முடிவு செய்க.** (10)

[35]

**அல்லது (or)**

**1.7 கொன்றைவேந்தன் விளக்கக் கதைகளிருந்து இல்லறம் புகுந்த துறவி என்ற கதையைப் பற்றி சுமார் 20 -25 வரிகள் எழுதுக.**

[35]

IEB Copyright © 2013 

## SECTION 2 பகுதி இரண்டு

**கீழ்வரும் பகுதியை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.**

மாயக் குயிலோர் மரக்கிளையில் வீற்றிருந்தே
பாயும் விழிநீர் பதைக்கும் சிறியவுடல்
விம்மிப் பரிந்துசொலும் வெந்துயர்ச்சொல் கொண்டதுவாய்
அம்மவோ! மற்றாங்கோர் ஆண்குரங்கு தன்னுடனே
ஏதேதோ கூறி இரங்கும் நிலைகண்டேன்
தீதேது? நன்றேது? செய்கைத் தெளிவேது?
அந்தக் கணமே அதையும் குரங்கினையும்
சிந்தக் கருதி உடைவாளில் கைசேர்ந்தேன்
கொன்றுவிடு முன்னே குயிலுரைக்கும் வார்த்தைகளை
நின்று சற்றே கேட்பதற்கென் நெஞ்சம் விரும்பிடவும்
ஆங்கவற்றின் கண்ணில் அகப்படா வாறருகே
ஓங்கு மரத்தின்பால் ஒளிந்துநின்று கேட்கையிலே
பேடை குயிதனைப் பேசியது 'வானரரே!

**2.1 கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை நிரப்புக:**

2.1.1 _ _ _ _ _ _ _ விழிநீர் பதைக்கும் சிறியவுடன் (1)
2.1.2 அந்தக் _ _ _ _ _ _ _ அதையும் குரங்கனையும் (1)
2.1.3 ஆங்கவற்றின் _ _ _ _ _ _ _ அகப்படா வாறருகே (1)

**2.2 சரியான விடை தருக.**

2.2.1 இந்தக் கதையை ஏன் குயில் பாட்டு என்று சொல்கிறோம்? (2)
2.2.2 குயில் பாட்டை எழுதியவர் யார்? (2)
2.2.3 குரங்கன் யார்? (2)
2.2.4 மாடன் எவ்வாறு பிறந்தான்? (2)
2.2.5 மாடன் யார்? (2)

**2.3 எதிர்ச்சொல் எழுதுக:**

2.3.1 பின் (2)
2.3.2 இது (2)
2.3.3 அந்த (2)
2.3.4 சிறிய (2)
2.3.5 இன்பம் (1)

IEB Copyright © 2013

2.4 ஒருமைக்குப் பன்மை எழுதுக:

2.4.1 செடி (1)
2.4.2 மரம் (1)
2.4.3 குரங்கு (1)

2.5 மாடனைப்பற்றி 4 - 5 வரிகள் எழுதுக. (5)

2.6 குரங்கனைப் பற்றி 4 - 5 வரிகள் எழுதுக. (5)

[35]

அல்லது (or)

2.7 இளவரசனைப்பற்றி 15 - 20 வரிகள் எழுதுக.

[35]

IEB Copyright © 2013 

## SECTION 3 பகுதி மூன்று

**கீழ்வரும் கதையை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.**

### ஆசிரியர் வாழ்த்து

என்னுயிர் மாணவர் முன்னாள்
இன்னுயிர் இனியர் இந்நாள் - கவிஞனாய்த்
தடம் பதிக்க முயல்கிறார் இளம்முனைவர்
தி. சேதுராமலிங்கம்.

என்ன சொல்வது ? எப்படிச் சொல்வது?
எவ்வளவு வளர்ந்து நிற்கிறார்? ஆச்சர்யமாய்
இருக்கிறது, சேது வா இது ? கண்ணுக்குத்
தெரிந்து குன்று ஒன்று மலையாய் வளர்கிறது,
மகிழ்ச்சியாய்த் தான் இருக்கிறது.

கடல் கடந்து வாழும் இவருக்கு அனுபவங்கள்
கவிதையாய்ப் பரிணமிக்கின்றன,
உற்றார் உறவினர்களைப் பிரிந்து, மனைவி
மக்களைப் பிரிந்து தொலைதூரம் சென்று வாழும்
தனிமை, கவிதைகளாய்ப் பிரவாகம் எடுக்கின்றன,
தனிமை தவிர்க்க தண்ணீர் தேடும் பலரிடையில்
இவர் மட்டும் வித்தியாசம் , தண்ணீராய்க் கவிதைகளைக்
கொட்டுகிறார்,

கடல்கடந்து சென்ற பலர் பணப்பைகளை நிரப்பும்
வேளையில் இவர் மட்டும் கவிதைகளாய் நிரப்புகிறார்.
"காலமெல்லாம் நீ வாழ்க" என்று எழுத்தறியா
இளமகனின் பிறந்த நாளில் கவிதையில் பொங்குவது
அருமை.

**எஸ். அற்புதராஜ்**
உதவித் தலைமையாசிரியர்
புனித வளனார் மேல் நிலைப்பள்ளி,
திருச்சிராப்பள்ளி - 620 002.

IEB Copyright © 2013

**3.1 சரியான விடை தருக:**

3.1.1 ஆசிரியர் முன்னால் யார் இருந்தது? (2)
3.1.2 இக்கவிதையை எழுதியவர் யார்? (2)
3.1.3 ஆசிரியர் யாரை வாழ்த்துகிறார்? (2)
3.1.4 எது ஆச்சரிமாய் இருக்கிறது? (2)
3.1.5 இந்த மாணவர் ஏன் தொலைதூரம் சென்றார்? (2)
3.1.6 எதைத் தண்ணீர்போல் கொட்டுகிறார்? (2)

**3.2 பன்மை தருக:**

3.2.1 கவிதை (2)
3.2.2 இடம் (2)
3.2.3 அனுபவம் (2)
3.2.4 மரம் (2)

**3.3 எதிர்ச்சொல் தருக:**

3.3.1 பின் (2)
3.3.2 போ (2)
3.3.3 பல (2)

**3.4 ஆண்மைக்குப் பெண்மை தருக:**

3.4.1 மாணவன் (2)
3.4.2 ஆசிரியர் (2)

**3.5 மேற்கண்ட கவிதையைப் பற்றி 4 - 5 வரிகள் எழுதுக.** (5)

**[35]**

**அல்லது (or)**

**3.6 சரியான விடை எழுதுக:**

3.6.1 திருக்குறளிலிருந்து ஏதேனும் ஐந்து குறள்களை எழுதுக. (15)
3.6.2 திருவள்ளுவரைப்பற்றி 12 - 15 வரிகள் எழுதுக. (20)

**[35]**

## SECTION 4 பகுதி நான்கு

**தங்கப் பதக்கம்**

**4.1 கீழ்வரும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் கேள்விகளுக்குப் பதில் தருக:**

சௌத்: இவனை எப்படி திருத்தனும் என்று நினைக்கிறேன்?

லட்சுமி: அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். என் சொந்தக்காரங்க வீட்ல ஒரு பெண் இருக்கு. பேசி முடிச்சிடலாங்க.

சௌத்: இவனுக்கு யார் பெண் கொடுப்பாங்க?

லட்சுமி: நீங்க சரியென்று சொல்லுங்க.

சௌத்: சரி லட்சுமி என் மகனுடைய நியாயமான சந்தோஷத்துக்கு நான் குறுக்கே நிற்கமாட்டேன்.

**4.1.1 முடிவு செய்க:**

(a) அந்தக் கவலை _ _ _ _ _ _ வேண்டாம். (2)

(b) இவனுக்கு யார் _ _ _ _ _ _ கொடுப்பாங்க? (2)

(c) நான் _ _ _ _ _ _ நிற்கமாட்டேன். (2)

**4.1.2 சரியான விடை தருக:**

(a) இந்த நாடகத்தின் கருத்து என்ன? (2)

(b) ஜெகன் ஏன் வீட்டை விட்டு ஓடிவிட்டான்? (2)

(c) இந்த நாடகத்தில் விமலா யார்? (2)

(d) பல ஆண்டுகளுக்கு ஜெகன் எங்கே இருந்தான்? (2)

IEB Copyright © 2013

**4.1.3 பன்மை தருக:**

(a) வீடு (2)

(b) மகன் (2)

(c) ஆண் (2)

**4.1.4 எதிர்ச்சொல் தருக:**

(a) உண்டு (2)

(b) நேற்று (2)

(c) இன்பம் (1)

**4.1.5 லட்சுமியைப்பற்றி 10 -12 வரிகள் எழுதுக.** (10)

[35]

**அல்லது (or)**

**4.2 தங்கப் பதக்கம் என்ற கதையைப் பற்றி 15 -20 வரிகள் எழுதுக.**

[35]

Total: 70 Marks

IEB Copyright © 2013